புரட்சிப்
# பெரியார் முழக்கம்
www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • அக்டோபர் (OCTOBER) 15, 2026 • புரட்சி 26 • முழக்கம்(ISSUE) 42 • விலை(PRICE) ரூ.6.00

# நவநீதம் பிள்ளைக்கு நோபல் பரிசு

**★ஈழத்தமிழர் உரிமைக்கு அய்.நா.வில் குரல் கொடுத்தவர் ★மனித உரிமைப் போராட்டத்தில் தமிழருக்குக் கிடைத்தப் பெருமை.**



நவி பிள்ளை என்கிற நவநீதம் பிள்ளை 1941 செப்டம்பர் 23ஆம் நாள் தென்னாப்பிரிக்காவில் நடால் மாகாணம் டர்பன் நகரத்தில் தமிழ் வம்சாவழிக் குடும்பத்தில் பிறந்தார். அவரது மூதாதையர்கள் தமிழ்நாட்டில் பிறந்து தென்னாப்பிரிக்காவில் குடியேறிவர்கள்.அவர் தந்தை பேருந்து ஓட்டுனர். 1965-ல் சட்டத்தில் பட்டம் பெற்றார். 1988ல் ‘ஆர்வட்’ கல்லூரியில் பயின்று முதல் தென்னாப்பிரிக்கராகச் சட்டப் படிப்பில் முனைவர் பட்டம் பெற்றார்.

1967இல் நடால் மாகாணத்தின் வெள்ளையரல்லாத முதல் பெண் வழக்குரைஞரானார். அது ‘இனஒதுக்கல்’ காலம் என்பதால் நீதிபதி அறைகளுக்குள் நுழைய அவர் அனுமதிக்கப்படவில்லை. அவர் வழக்குரைஞராகப் பணியாற்றிய 28 ஆண்டுக் காலத்தில் ’இனஒதுக்கலுக்கு’ எதிராகத் தொடர்ந்து போராடினார். ’இனஒதுக்கல்’ சட்டங்களால் சிறைப்படுத்தப்பட்ட பலருக்காகவும் வாதாடினார். பெரும் போராட்டங்கள் நடத்தி ராபன் தீவில் சிறைப்பட்டிருந்த நெல்சன் மண்டேலா உள்ளிட்ட பலருக்கும் வழக்குரைஞரைச் சந்திக்கும் உரிமையைப் பெற்றுக் கொடுத்தார். குடும்ப வன்முறையில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கெனப் பாதுகாப்பு இல்லங்கள் நடத்தினார். ஈக்வாலிட்டி நவ் (இப்போதே சமத்துவம்) என்னும் பன்னாட்டுப் பெண்கள் அமைப்பை 1992இல் நிறுவினார்.

1995இல் ஆப்பிரிக்கத் தேசியக் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்ததும் நெல்சன் மண்டேலா இவரைத் தென்னாப்பிரிக்க உயர் நீதிமன்றத்தில் வெள்ளையரல்லாத முதல் பெண் நீதிபதியாக்கினார். அப்போதுதான் முதன் முதலாக அவருக்கு நீதிபதி அறைக்குள் நுழையும் வாய்ப்பும் கிடைத்தது. அங்கு சிலகாலம் பணியாற்றிய உடனேயே, அவர் ருவாண்டாவுக்கான பன்னாட்டுக் குற்றவியல் தீர்ப்பாயத்தின் நீதிபதியாக அய்.நா பொது அவையால் அமர்த்தப்பட்டார். அப்போதுதான் ஜீன்பால் அக்கேசு என்னும் வழக்கில் பாலியல் வல்லுறவும் வன்கொடுமையும் இனக்கொலையே என்ற வரலாற்று முக்கியத்தும் வாய்ந்த தீர்ப்பை அளித்தார். அப்போது நவநீதம் பிள்ளை கூறினார்: "காலங்காலமாகவே பாலியல் வல்லுறவு என்பது போர் வெற்றியாகவே கருதப்பட்டு வருகிறது. இப்போது அது போர்க் குற்றமாகக் கருதப்படும். நாம் இதன் மூலமாகத் தெரிவிக்க விரும்பும் அழுத்தமான செய்தி என்னவென்றால், வன்புணர்வை இனியும் போர் வெற்றிக்குக் கிடைத்த ஒரு விருதாகக் கருத முடியாது."

2003 பிப்ரவரியில் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தின் நீதிமன்றக் குழுவில் அமர்த்தப்பட்டார். 2008 சூலை 24ஆம் நாள் அய்.நா மனித உரிமைகள் அமைப்பின் உயர் ஆணையர் ஆனார். 2009 இல் முள்ளிவாய்க்கால் இனஅழிப்பு முடிந்த நாள் தொட்டு இலங்கை உள்நாட்டுப் போரில் நிகழ்ந்த போர்க் குற்றங்களையும் பிற மனித உரிமை மீறல்களையும் அம்பலப்படுத்துவதிலும் அவற்றுக்கான நீதி கிடைக்கச் செய்வதிலும் அவர் ஆற்றிய அறிவார்ந்த, துணிவார்ந்த பங்கை உலகத் தமிழினம் மட்டுமல்ல, மனித உரிமைகளில் நம்பிக்கை வைத்துள்ள அனைவரும் மதித்துப் போற்றுவர். அவர் அய்.நாவின் மனித உரிமை ஆணையத்தின் தலைவராக இருந்தபோது தான் போர்குற்ற விசாரணையை அய்.நா ஏற்றது. சிங்களத்தின் எதிர்ப்பையும் மீறி நவிபிள்ளை ஈழம் சென்று பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து விசாரணை நடத்தினார். தொடர்ந்து துணிவோடு கொழும்புவில் பேட்டியும் அளித்தார். 2014 ஆண்டு பிப்-24ம் தேதி நவி பிள்ளை தலைமையிலான அய்.நா மனித உரிமைகள் உயர் ஆணையர் அலுவலகம் இலங்கை தொடர்பான முக்கிய அறிக்கை வெளியிட்டது. அதே ஆண்டு மார்ச் மாதம் அய்.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. விசாரணை நடத்தும் அதிகாரம் அய்.நா மனித உரிமைகள் உயர் ஆணையர் அலுவலகத்துக்குத் தரப்பட்டது. உலகின் பல்வேறு நாடுகள் மூலமாக இதைத் தடுக்க முயற்சித்தது இலங்கை. ஆனால் அதை மீறி செயல்பட்டார் நவநீதம் பிள்ளை.

இப்போது அய்.நா மனித உரிமை மன்றத்தின் சார்பில் தொடங்கப் பெற்றுள்ள பன்னாட்டுப் புலனாய்வுப் பொறியமைவைத் தக்கவாறு ஏற்படுத்துவதில் நவநீதம் பிள்ளை வகித்த பங்கு வரலாற்றில் என்றும் நினைக்கப்படும். தென்னாப்பிரிக்க நீதியியலாளரான நவி பிள்ளைக்கு 2026ஆம் ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசை வழங்கியதன் மூலம், நார்வே நோபல் குழு தனது நம்பகத்தன்மையை மீட்டெடுக்க முயன்றுள்ளது. அண்மைக் காலங்களில் சர்ச்சைக்குரிய முடிவுகளால் அதன் நற்பெயருக்குக் களங்கம் ஏற்பட்டிருந்தது என்று ‘இந்து’ நாளேடு (ஆக-12) தலையங்கம் தீட்டியுள்ளது.

# வைக்கத்தில் குடும்பவிழா நடத்தியது கோபி மாவட்டக் கழகம்

ஈரோடு வடக்கு (கோபி) மாவட்டக் கழகத்தின் சார்பில் தந்தை பெரியாரின் 148 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு குடும்பச் சுற்றுலா செல்வது என தீர்மானிக்கப்பட்டு அக்டோபர்-2 வெள்ளி இரவு தோழர்கள் குடும்பமாக ஜாதி அடிமை-த்தனத்திற்கு எதிராக தந்தை பெரியார் களமாடிய கேரளா மாநிலம் வைக்கம் பகுதிக்கு குடும்பச் சுற்றுலா சென்றனர்.



எந்த வீதியில் தாழ்த்தப்பட்ட மக்கள் நுழையக் கூடாது என்று தடுக்கப்பட்ட அநீதிக்கு எதிரானப் போராட்டம் நடத்தப்பட்டதோ அந்த வீதியில் இருந்து ஊர்வலமாக தோழர்கள் பெரியார் நினைவகத்தை அடைந்து பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தனர். தொடர்ந்து தோழர்கள் குடும்பமாக கொச்சின் மற்றும் செரயாய் கடற்கரை சென்றனர்.

# பெரியார் ஏன் நாத்திகம் பேசினார்? ராகுல் காந்தியிடம் உரையாடிய மாணவர் கழகத் தோழர் பேரன்பு

மாணவர்களின் குரல் கலந்துரையாடல் நிகழ்ச்சி சென்னை தீவுத்திடலில் அக்-10 அன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மாலை 6.30 மணிக்கு ராகுல் மாணவர்களுடன் கலந்துரையாடல் நடத்தினார். அப்போது, இந்திய மாணவர்களின் எதிர்காலம் மற்றும் கல்வி குறித்து அவர் பல்வேறு கேள்விகளை எழுப்பி முக்கிய கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்.



தொடர்ந்து நிகழ்ச்சியில் பேசிய ராகுல் தமிழ்நாட்டில் பகுத்தறிவு சிந்தனைகளை விதைத்தவர் பெரியார் தான் என்றார். எதையும் கேள்வி கேட்கச் சொன்னவர் பெரியார் என்று புகழாரம் சூட்டினார்.

மாணவர்களிடம் நிகழ்த்திய உரையாடலில் தமிழ்நாடு மாணவர் கழக சென்னை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பேரன்பு பங்கேற்றார். பெரியார் கொள்கை நோக்கி எப்படி ஈர்க்கப்பட்டேன் என்பதை ராகுலிடம் விளக்கினார். பெரியார் பேசிய கடவுள் மறுப்புக் கொள்கையானது ஜாதி எதிர்ப்பு, மத எதிர்ப்பு, ஆணாதிக்க எதிர்ப்புக்கானது என்று விளக்கினார். அப்போது இதுகுறித்து பெரியார் மோடிக்கு என்ன செய்தியைக் கூறியிருப்பார் என்று ராகுல் கேட்டதற்கு பேரன்பு கீழ்கண்ட பதிலை அளித்தார். “இந்த உலகத்தில் உயர்ந்த கொள்கையாக மதம், மொழி, ஜாதி நிச்சயமாக இருக்காது. மனிதம் தான் இந்த உலகத்திலே மிக உயர்ந்த கொள்கை. அதனால் நீங்கள் கடைபிடிக்கக் கூடிய மதத்தை, ஜாதிய ஆணாதிக்க-த்தனத்தை விட்டு மனிதத்தைப் பேசத் தொடங்குங்கள் என்று அவரது தலையிலேயே குட்டி சொல்லி இருப்பார்” என்றார். பேரன்பை ராகுல்காந்தி உங்களின் பதில் எனக்கு பிடித்திருக்கிறது என்று பாராட்டினார். ராகுல்காந்தி தனது முகநூல் பக்கத்தில் இந்த காணொலிகளை பதிவிட்டுள்ளார்.

# ஜாதிவாரிக் கணக்கெடுப்பில் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலை முறையாக தயாரிக்க கோரிக்கை

ஜாதிவாரிக் கணக்கெடுப்பை வலியுறுத்தி 03.10.2026 அன்று சென்னையில் நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் தோழர்கள் தியாகு, அய்யநாதன், திருமுருகன் காந்தி, வாலாசா வல்லவன், அன்பு தனசேகரன், விநாயகம், தபசி குமரன், ஜி. மஞ்சுளா, ஊடகவியலாளர் ஜீவசகாப்தன், சமந்தா, ராமன் ராஜு, மருது பாண்டியன் மற்றும் ஓ.பி.சி தொழிற்சங்கத் தலைவர்களும், நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

ஜாதிவாரிக் கணக்கெடுப்பின் முக்கியத்துவம் குறித்தும், ஒன்றிய அரசின் துரோகங்கள் குறித்தும் விரிவாகக் கருத்துகளை முன் வைத்தனர். ஜாதிவாரிக் கணக்கெடுப்பை வலியுறுத்தியும், ஜாதிவாரிக் கணக்கெடுப்பு படிவத்தில் ஓபிசி பிரிவை குறிப்பதற்கு *separate column* இணைக்கவும், ஒவ்வொரு ஜாதிக்கும் *unique caste code* வழங்கக் கோரியும், விடுபட்ட ஓபிசி ஜாதிகளை இணைத்து புதிய ஜாதிப் பட்டியல் வெளியிடக் கோரியும், சமூக நீதிக் கண்ணோட்டத்தில் அதன் தேவைகள் மற்றும் முக்கியத்துவம் குறித்தும் பல்வேறு சமூகத் தலைவர்களும் அரசியல் தலைவர்களும் விரிவாக விளக்கிப் பேசினர்.




நிறைவாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மண்டல வாரியாகவும், மாவட்டத் தலைநகரங்களிலும் இக்கோரிக்கைகளை வலியுறுத்தி கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், மாநாடுகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழகம் தழுவிய அளவில் அனைத்து இயக்கங்களையும் ஒருங்கிணைத்து விரிவான அளவில் இந்தப் பிரச்சினைகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்லவும், இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்திப் போராட்டங்களை முன்னெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது. பல்வேறு சமூகத் தலைவர்களும், அரசியல் இயக்கத் தலைவர்களும், ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டனர். நிகழ்விற்கு ஓபிசி சங்கத் தலைவர் இரத்தின சபாபதி தலைமை தாங்கினார்.

# தேர்தல் ஆணையத்தின் கடந்தகால வரலாறு என்ன?

13 கோடி மக்களின் வாக்குரிமையைத் திருடிய தேர்தல் ஆணையத் தலைவரைக் காப்பாற்றுவதற்குக் கொடூரமான அடக்கு முறைகளை அவிழ்த்து விட்டிருக்கிறது ஒன்றிய ஆட்சி. கரப்பான் பூச்சி ஜனதா கட்சி இளைஞர்கள் அக்-10, ஜந்தர் மந்தரில் நடத்த இருக்கும் போராட்டத்தை ஒடுக்குவதற்கு 200-க்கும் அதிகமான தொடர் வண்டிகள் நிறுத்தப்பட்டுள்ளன. இணைய சேவை முழுவதுமாக துண்டிக்கப்பட்டு இருக்கிறது. டெல்லி நோக்கி வரும் இளைஞர்கள் கைது செய்யப்படுகிறார்கள். 50 புறநகர் தொடர்வண்டி நிலையங்கள் மூடப்பட்டன.

எந்த ஒரு குடிமகனின் வாக்குரிமையும் பறிபோய் விடக்கூடாது என்று அரசியல் நிர்ணய சபையில் எச்சரித்தார் புரட்சியாளர் அம்பேத்கர். அதே பார்வையில் தேர்தல் ஆணையமும் அரசியல் நிர்ணய சபையும் செயல்பட்டன என்பது கடந்த கால வரலாறு!

1951 ஆம் ஆண்டு முதல் தேர்தல் ஆணையம் சுகுமார் சென் அய்சிஎஸ் தலைமையில் அமைக்கப்பட்டது. ஆனால் தேர்தல் ஆணையம் அமைக்கப்படுவதற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்பே அரசியல் நிர்ணய சபையின் அதிகாரிகள் குழு நாடு முழுதும் வாக்காளர் பட்டியல்களைத் தயாரிக்கும் பணியில் இறங்கியது. அப்போது அரசியல் சட்டம் அமலுக்கு வரவில்லை; குடிமக்கள் உரிமையும் சட்டத்தின் வழியாக வழங்கப்படவில்லை. குடியுரிமை வழங்கப்படாத காலத்திலேயே வாக்குரிமையை வழங்கியது அரசியல் அமைப்பு அவை.

ஆனால் இப்போது வாக்குரிமையை மட்டும் வழங்க வேண்டிய தேர்தல் ஆணையம் சட்டத்தை மீறி குடியுரிமைக் கணக்கையும் எடுத்து வாக்காளர் உரிமையைப் பறித்திருக்கிறது. அதுவும் பாகிஸ்தான் பிரிவினை நிகழ்ந்த அந்தக் காலத்தில் 80 லட்சம் அகதிகள் பாகிஸ்தானுக்கு திரும்பாமல் இந்தியாவிலேயே தங்கிவிட்ட காலகட்டம். இத்தகைய சூழலில் இந்த மக்களின் வாக்குரிமையை உறுதி செய்வதில் மிகுந்த கவனம் செலுத்தியது அரசியல் அமைப்பு அவையும், தேர்தல் ஆணையமும்.

இப்போது நடப்பது போல் இவர்களை பட்டியலில் இருந்து நீக்கும் சூழ்ச்சி திட்டங்கள் வகுக்கப்படவில்லை. மாறாக விதிகள் தளர்த்தி பட்டியலில் இணைத்தார்கள். 1948 மார்ச் 31ஆம் தேதிக்கு முன் தொகுதியில் 180 நாட்கள் இருந்தாலே போதும்; அவர்களுக்கு வாக்குரிமை உண்டு என்று முடிவெடுக்கப்பட்டது. அகதிகளாக வந்தவர்களின் குடியிருப்புகள் நிரந்தரமாக இருக்க முடியாது என்று கவலையோடு பரிசீலித்து அவர்கள் குடியிருப்புக்கான சான்றுகள் தேவையில்லை என்றும் முடிவு செய்யப்பட்டது. "இறுதி வரை இந்தியாவில் இருப்பேன் என்ற உறுதி மொழி வழங்கினாலே போதும்; சான்றுகள் தேவையில்லை என்று முடிவு எடுத்து அவர்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

1951 அக்டோபரில் நடந்த முதல் பொதுத் தேர்தல் நாடு முழுதும் நான்கு மாத காலம் நடந்தது; வாக்குப்பதிவு 17 நாட்கள் நடந்தன. மற்றொரு முக்கிய செய்தியைக் குறிப்பிட வேண்டும்; பீகார், உ.பி ம.பி, ராஜஸ்தான் போன்ற இந்தி மாநிலங்களில் பெண்களின் பெயர்களே பதிவாகவில்லை. பெண்கள் பெயர் கூறுவதற்கே மறுப்பு தெரிவித்தார்கள். அந்த அளவுக்கு பார்ப்பன மனுசாஸ்திர பழமைச் சிந்தனையில் மூழ்கிக் கிடந்தார்கள்.

கணவர், தந்தை, மகன், பேரன் என்ற ஆண்கள் உறவின் அடிப்படையிலேயே வாக்காளர் பட்டியலில் பெண்கள் பதிவு செய்யப்பட்டனர். சமூகம் அவ்வளவு பிற்போக்காக இருந்தது. 80 மில்லியன் பெண் வாக்காளர்களில் 2.8 மில்லியன் பெண் வாக்காளர்கள் இப்படி பெயர் இல்லாமல் பதிவு செய்யப்பட்டதால் அவர்களின் பெயர்கள் நீக்கப்பட்டன.

ஆனாலும் அடுத்த தேர்தலிலும் இந்த நிலை நீடிக்கக் கூடாது என்பதற்காக தேர்தல் ஆணையம் கவலை எடுத்து இந்த பெண்களை சந்தித்து வலியுறுத்தி பெயர்களைச் சொல்ல வைக்க வேண்டும் என்று பெண்கள் அமைப்புக்கும் அரசியல் கட்சிகளுக்கும் வேண்டுகோள் விடுத்தது. அதற்காக இயக்கத்தையே நடத்தி அவர்களை வாக்காளர் பட்டியலில் கொண்டு வந்து சேர்த்து 1957 ஆம் ஆண்டு தேர்தலில் வாக்களிக்க வைத்தது தேர்தல் ஆணையம் என்பது வரலாறு!

முதல் தேர்தல் ஆணையர் சுகுமார் சென் இதற்கான முயற்சிகளை எடுத்ததோடு தொகுதி மறுவரையறையிலும் மாநிலங்களுக்கிடையே ஏற்றத்தாழ்வு இருந்து விடக்கூடாது என்பதில் மிகுந்த கவனம் செலுத்தினார். பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் படித்தவர்கள், பணக்காரர்கள், ஆண்களுக்கு மட்டும் ஓட்டுரிமை வழங்கப்பட்டது. அப்போது சென்னை மாகாணத்தில் ஆட்சியில் இருந்த நீதிகட்சி ஆட்சி இந்தியாவிலேயே முதன் முதலாக பெண்களுக்கு ஓட்டுரிமை வழங்கியது என்பதும் வரலாறு.

ஆனாலும் அரசியல் அமைப்பு அவை அனைவருக்கும் ஓட்டுரிமை வழங்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தது. முதல் பொதுத் தேர்தலில் வாக்களித்த 173 மில்லியன் வாக்காளர்களில் பெரும்பாலோர் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அனைவருக்கும் ஓட்டுரிமை என்ற ஒற்றுமைக் கருத்தியலில் பார்ப்பனியப் பார்வையில் பாகுபாடுகளைக் கொண்டுவந்து சம உரிமையின் நோக்கத்தைச் சிதறடித்துள்ளது மோடி, அமித்ஷா ஞானேஷ் குமார் கும்பல். ஞானேஷ் குமார் பதவி விலகவேண்டும்; எஸ்.அய்.ஆர்-அய்த் திரும்பப் பெற வேண்டும்!

(தகவல்களுக்கு ஆதாரம்: ஆய்வாளர் 'ராமச்சந்திர குகா' எழுதிய "India after Ganthi")

**- விடுதலை இராசேந்திரன்**

# உடைந்தது ஜாதி வெறிப்பூட்டு



குரால் கிராமத்து பெருமாள் கோயிலில் ஜாதிவெறி பூட்டை உடைத்துத் தள்ளி இருக்கிறார் மாவட்ட பெண் போலீஸ் அதிகாரி ஷானாஸ். முகநூலில் அவருக்கு குவியும் பாராட்டு மழை நம்மை மெய் சிலிர்க்க வைக்கிறது. அரசுப் பதவி வழங்கும் அதிகாரத்தை எப்படி எதற்காகப் பயன்படுத்த வேண்டும் என்பதற்கு இவர் சான்றாக நிற்கிறார்.

50 ஆண்டுகளாக தலித் மக்களை கோயிலுக்குள்ளே அனுமதிக்காத கிராமங்கள் தமிழ்நாட்டில் இருக்கின்றன என்பது அவமானம்; வெட்கக்கேடு! இந்தக் கிராமங்களில் இதற்கு நியாயம் கேட்க மனிதர்களே இல்லாமல் போய் விட்டார்களா? சமூக அவமானத்தை கண்டும் காணாமல் கடந்து போகும் மனநிலை எப்படி நீடிக்கிறது?

தமிழகத்தின் பல கிராமங்கள் இப்படி ஜாதி வெறியிலும் ஜாதிச் சங்கப் பிடியிலும் தான் சிக்கித் தவிக்கின்றன. "நீங்க நாசமா போயிடுவீங்க"என்று ஜாதி வெறிக்கு ஆதரவாக குரல் கொடுக்கும் பெண்களும் உரிமைக்கு போராடும் பெண்களும் ஒரே தோற்றத்தில் தான் இருக்கிறார்கள்; சொல்லப் போனால் ஒரே வாழ்நிலை தான்!

ஆனால் எந்த விலை கொடுத்தும் வாங்காது இலவசமாக கிடைக்கும் இந்த ஜாதி இப்படி ஒரு கொடூர வெறியை மண்டைக்குள் திணித்து வைத்திருக்கிறது. கிராமத்து ஜாதி வெறி ஆண்கள் இந்த சட்ட விரோத செயல்பாடுகளுக்கு பெண்களைக் களத்துக்கு அனுப்புகிறார்கள்; ஆனால் பெரும்பாலான ஜாதிக் குடும்பங்களில் ஆண்களின் வன்முறையையும், ஒடுக்கு முறையையும் சந்திப்பவர்களும் இவர்கள்தான்; தன்னிலை உணராமல் ஜாதிவெறி தடுக்கிறது. இதே பெண் சமூகத்தில் பிறந்து அய்.பி.எஸ் படித்த ஒரு பெண் அதிகாரிதான் இங்கே 50 ஆண்டுகால அவமானத்திற்கு தீர்வு கண்டிருக்கிறார்.16 பேர் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கும் பதிவு செய்திருக்கிறார்.

"கோயில் அறநிலையத்துறையின் கீழ் வந்துவிட்டது என்பது உங்களுக்கு தெரியாதா?வழிபாட்டில் யாரும் எவருக்கும் தடை போட முடியாது" என்று ஓங்கி ஒலித்த அந்த கம்பீரமான குரல் ஆனந்தக் கூத்தாட வைத்து விட்டது. இப்படியும் காவல் துறையில் சில அதிகாரிகள் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையை விதைத்து இருக்கிறார். சல்யூட் மேடம்!

# தாராபுரம் தொகுதியில் அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி தோழர்களுடன் பரப்புரை

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் திமுகவின் வேட்பாளர் வழக்கறிஞர் எஸ். சுகன்யா அவர்களுக்கு திவிக ஆதரவு தெரிவித்து 23-09-2026 புதன் கிழமை 11 மணி அளவில் அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி தலைமையில் இடைதேர்தல் பரப்புரை செய்தனர்.



திமுக துணை பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான, தேர்தல் பணிக் குழுத் தலைவர்களான ஆ. இராசா, துணை பொதுச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான கே.என் நேரு, திமுக முன்னாள் அமைச்சர்கள் பெரிய கருப்பன், கயல் விழி செல்வராஜ், கிழக்கு மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் ஆகியோருக்கு அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி பயனாடை அணிவித்து ஆதரவைத் தெரிவித்தார். திமுக மாநில மாணவர் அணி தலைவர் இர.வீரமணி உடன் இருந்தார். நிகழ்வில் சென்னிமலை செல்வராஜ் ஈரோடு மாவட்டத் தலைவர், நல்ல தம்பி ஈரோடு மாநகரச் செயலாளர், சு.சிவானந்தம் ஒன்றியச் செயலாளர் மடத்துக்குளம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தோழர்.பூவராகன் முடிவெய்தினார்!



தோழர் பூவராகன் 94-ஆம் வயதில் கோவையில் அக்-7ம் தேதி முடிவெய்தினார். நாத்திக அறிவியல் அறிஞர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்களை தமிழில் ஆக்கியவர். சிந்தனையாளன் இதழ்களில் ப.செங்குட்டுவன் என்ற பெயரில் கட்டுரைகளை எழுதியவர். பெரியார் தலைமையில் பெரியாரின் பெருந்தொண்டர் பேராசிரியர் மு.க.சுப்பிரமணியம் அவர்களின் தங்கையை ஜாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டவர் ஆவார். தோழர் பூவராகன் எழுதிய "அறிவறிந்த மூடர்கள், விஞ்ஞானத்தின் வளர்ச்சியும் மூடநம்பிக்கையின் வீழ்ச்சியும், மதம் விளைத்த மாச்சரியங்கள், கீதை ஒரு சமூக விரோத நூல்" போன்ற பல நூல்களை திராவிடர் விடுதலைக் கழகம் வெளியிட்டுள்ளது. திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக புகழ்வணக்கம் செலுத்துகிறோம்.

# குடியாத்தத்தில் நினைவேந்தல் படத்திறப்பு

அறிவியல் மன்றத் வேலூர் மாவட்டத் தலைவர் தெருவிளக்கு கோபிநாத் அவர்களின் தந்தை அய்யா இராஜேந்திரன் (ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர்) அவர்களின் படத்திறப்பு மற்றும் நினைவேந்தல் நிகழ்வு 4.10.2026 ஞாயிற்றுக்கிழமை குடியாத்தத்தில் நடைபெற்றது. பிரின்ஸ் கஜேந்திர பாபு படத்தினைத் திறந்து வைத்து நினைவேந்தல் உரையாற்றினார். கழக தலைமைக்குழு உறுப்பினர் அய்யனார் நினைவேந்தல் உரையாற்றினார்.



# சரஸ்வதி பூஜை-ஆயுத பூஜை ஆபாசங்கள்! -பெரியார்

சரஸ்வதி பூஜை என்பது ஒரு அர்த்தமற்ற பூஜை. கல்வியையும் தொழிலையும் ஒரு பெண் தெய்வமாக்கி , அதற்குச் சரஸ்வதி என்று பெயர் கொடுத்து அதைப் பூஜை செய்தால் கல்வி வரும், வித்தை வரும் என்று சொல்லி, நம்மைப் பார்ப்பனர்கள் ஏமாற்றி, கல்வி கற்கச் சொந்த முயற்சி செய்து கொள்ளாமல், சாமியையே நம்பிக்கொண்டு இருக்கும்படி செய்துவிட்டு, நாம் அந்தச் சாமி பூஜையின் பேரால் கொடுக்கும் பணத்தைக்கொண்டே, அவர்கள் படித்துப் பெரிய படிப்பாளியாகிக்கொண்டு, நம்மைப் படிப்பு வரமுடியாத "மக்குகள்" என்று சொல்லிக் கொண்டு இருக்கின்றார்கள்.



முதலாவது, சரஸ்வதி எனும் சாமியின் சொந்த யோக்கியதையைக் கவனித்தால், அது பார்ப்பனர் களின் புராணக் கதைகளின்படியே மிக்க ஆபாசமானதாகும். அதாவது, சரஸ்வதி என்கிற ஒரு பெண் பிரம்மனுடைய சரீரத்திலிருந்து உண்டாக்கப்பட்ட பிறகு, அவள் அழகைக் கண்டு, அந்தப் பிரம்மனாலேயே மோகிக்கப்பட்டு அவளைப் புணர அழைக்கையில், அவள் பிரம்மனை தகப்பன் என்று கருதி, அதற்கு உடன்படாமல் பெண் மான் உருவம் எடுத்து ஓடவும், உடனே பிரம்மன் தானும் ஒரு ஆண் மான் உருவமெடுத்து அவளைப் பின் தொடர்ந்து ஓடவும் சிவன் வேட உருவமெடுத்து அவளைப்பின் தொடர்ந்து ஓடவும், சிவன் வேட உருவமெடுத்து ஆண் மானைக் கொல்லவும், பிறகு சரஸ்வதி அழுது சிவபிரானால் மறுபடியும் பிரம்மனை உயிர்ப்பிக்கச் செய்து, பிரம்மனுக்கு மனைவியாக மீண்டும் சம்மதித்தாக சரஸ்வதி உற்பவக்கதை கூறுகிறது.

**சரஸ்வதி பூசை செய்யும் ஒரு வியாபாரியாவது சரஸ்வதிக்குப் பயந்து பொய்நிறை நிறுக்காமலோ குறையளவு அளக்காமலோ, தப்புக்கணக்கு எழுதாமலோ இருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது.**

இரண்டாவது, ஒரு விதத்தில் சரஸ்வதி பிரம்மாவுக்குப் பேத்தி என்று சொல்லப்படுகிறது. ஒரு காலத்தில் ஊர்வசியின் மீது ஏற்பட்ட ஆசையின்போது வெளிப்பட்ட இந்திரியத்தை ஒருகுடத்தில் விட்டு வைக்க, அக்குடத்தில் இருந்து அகத்தியன் வெளியாகி அந்த அகத்தியன் சரஸ்வதியைப் பெற்றான் என்று சொல்லப் படுகிறது. அதனால் பிரம்மாவுக்கு சரஸ்வதி, மகன் வயிற்றுப் பேத்தியாகிறாள். எனவே சரஸ்வதி பிறப்பும், வளர்ப்பும் மேற்படி நடவடிக்கையும் பார்ப்பனப் புனைவுப்படி மிகவும் ஆபாசமும் ஒழுக்க ஈனமுமானதாகும்.

நிற்க, இந்த யோக்கியதையுடைய அம்மாளை எதற்காக மக்கள் பூஜை செய்கிறார்கள் என்பது இதைவிட மிகவும் வேடிக்கையான விஷயம். அதாவது, சரஸ்வதி வித்தைக்கு அதிபதியான தெய்வம் ஆனதால், வித்தையின் பயன் தொழில் என்றும், தொழிலுக்கு ஆதாரமானவை ஆயுதங்கள் என்றும் கருதிக்கொண்டு, சரஸ்வதி பூஜை ஆயுத பூஜை என்று ஒவ்வொரு நாளைக் குறித்துக் கொண்டு, அந்த நாளை விடுமுறையாக்கி, புத்தகங்களையும் ஆயுதங்களையும் வைத்துப் பூஜை செய்கின்றார்கள்.

இந்தப் பூஜையில் அரசன் தனது ஆயுதங்களையும் வியாபாரி தனது கணக்குப் புத்தகங்களையும், தராசு, படிக்கல், அளவு மரக்கால், படி , உழக்கு, பெட்டி முதலியவற்றையும்; தொழிலாளிகள் தங்கள் தொழிலுக்குரிய ஆயுதங்களையும், இயந்திரக்காரர்கள் தங்கள் இயந்திரங்களையும், மாணவர்கள் தங்கள் புத்தகங்களையும், குழந்தைகள் பொம்மைகளையும், தாசிகள் தங்கள் ரவிக்கைகளையும், சேலைகளையும் நகைகளையும், வாத்தியக்காரர்கள் தங்கள் வாத்தியங்களையும் இதுபோல் ஒவ்வொரு வரும் தங்கள் இலட்சியத்திற்கு வைத்திருக்கும் அவரவர் ஆயுதங்களையும் வைத்துப் பூசை செய்கிறார்கள்.

இதனால் அந்தத் தினத்தில் தொழில்கள் நின்று அதனால் வரும்படிகளும் போய் பூஜை, ஓய்வு முதலிய ஆடம்பரங்களுக்காகத் தங்கள் கையில் இருக்கும் பணத்தில் ஒரு பகுதியைச் செலவழித்து, போதாவிட்டால் கொஞ்சம் கடன் வாங்கியும் செலவழிப்பதைவிட இதனால் யாதொரு நன்மையும ஏற்படுவதாகச் சொல்வதற்கு இடமே இல்லை.

சரஸ்வதி பூஜை செய்யும் ஒரு வியாபாரியாவது சரஸ்வதிக்குப் பயந்து பொய்நிறை நிறுக்காமலோ குறையளவு அளக்காமலோ, தப்புக்கணக்கு எழுதாமலோ இருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. அதுபோலவே கைத்தொழிலாளர்கள் தங்கள் ஆயுதத்தைக் கழுவிச் சந்தனம், குங்குமப் பொட்டு வைத்து விழுந்து கும்பிடுவார்களேத் தவிர அவர்களுள் எவனாவது நாணயமானவனாய் நடக்கின்றான் என்றோ, தொழில்கள் தாராளமாய் கிடைக்கின்றது என்றோ சொல்லுவதற்கு இடமில்லாமல் இருக் கின்றார்கள். அதுபோலவே புத்தகங்களையும், கூளக் குப்பைகளையும் அள்ளி அவற்றிற்குப் பொட்டு வைத்துப் பூஜை செய்கின்றார்களே அல்லாமல், காலோ கையோபட்டு விட்டால், தொட்டுக் கண்ணில் ஒத்திக் கொள்கின்றார்களே அல்லாமல், நமது நாட்டில் படித்த மக்கள் 100க்கு 5 பேர்கள் என்று தான் உள்ளார்கள்.

இவ்வளவு ஆயுத பூஜை-சரஸ்வதி பூஜை செய்தும் நமது வியாபாரிகள் நஷ்டமடைந்தும், தொழிலாளர்கள் பிழைக்கத் தொழில்கள் இன்றியும் அவதிப்பட்டுக்கொண்டு இருக் கின்றார்கள். சரஸ்வதியின் ஜாதியைச் சேர்ந்த பெண்கள் 1,000த்துக்கு 9 பேர்கள் படித்து உள்ளார்கள். இதன் காரணம் என்ன? நாம் செய்யும் பூஜைகளை சரஸ்வதி அங்கீகரிக்கவில்லையா? அல்லது சரஸ்வதி தெய்வத்திற்கும் இந்த விஷயத்திற்கும் ஒன்றும் சம்பந்தம் இல்லையா? அல்லது சரஸ்வதி என்கிற தெய்வமே ஒரு பொய்க் கற்பனையா? என்பவை யாகிய இம்மூன்றில் ஒரு காரணமாகத் தான் இருக்க வேண்டும்.

இவையாவும் சுத்த முட்டாள்தனமான கொள்கைகள் என்பது தான் எனது அபிப்பிராயம். அயல்நாட்டானைப் பார்த்தால் அவனுக்கு சரஸ்வதி என்ற பேச்சோ கல்வித்தெய்வம் என்ற எண்ணமோ சுத்தமாய் கிடையாது. அன்றியும், நாம் காகிதத்தையும் எழுத்தையும் சரஸ்வதியாய்க் கருதிக்கொண்டும், தொட்டுக் கண்ணில் ஒத்திக்கொண்டும் நமக்குக் கல்வி இல்லை. ஆனால் வெள்ளைக்காரன் மலங்கழித்தால் சரஸ்வதியைக் கொண்டே (காகிதத்தை) மலம் துடைத்தும் வருகிறான்.

ஆனால் 100-க்கு 60 பெண்கள் அவர்களில் படித்து இருக்கிறார்கள் உண்மையிலேயே சரஸ்வதி என்ற தெய்வம் ஒன்று இருக்கும் என்றால், பூஜை செய்பவர்களைத் தற்குறியாகவும் மலம் துடைப்பவர்களை அபார அறிவாளிகளாகவும் கல்விமான்களாகவும் செய்யுமா என்று தயவுசெய்து யோசித்துப் பாருங்கள்.

உண்மையில் யுத்த ஆயுதம், கைத்தொழில் ஆயுதம், வியாபார ஆயுதம் ஆகியவைகள் சரஸ்வதி என்னும் தெய்வ அம்சமாய் இருக்குமானால், அதைப் பூஜை செய்யும் இந்த நாடு அடிமைப்பட்டும் தொழிலற்றும், வியாபார மற்றும் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கவும், சரஸ்வதியைக் கனவிலும் கருதாது, சரஸ்வதி பூஜை செய்கின்றவர்களைப் பார்த்து "முட்டாள்கள், அறிவிலிகள், காட்டு மிராண்டிகள்" என்று சொல்லிக் கொண்டிருக்கும் நாடு சுதந்திரத்துடனும், வியாபாரிகள் அரசாட்சியுடனும், தொழிலாளர் ஆதிக்கத்துடனும் இருக்க முடியுமா என்பதையும் யோசித்துப் பாருங்கள்.

இந்தப் பூஜையின் மூலம் நமது முட்டாள்தனம் எவ்வளவு வெளியாகிறது என்று பாருங்கள்! இராஜாக்கள் கொலு இருப்பது, பொம்மைகள் கொலு இருப்பது, சாமிகள் கொலு இருப்பது, இதற்காக ஜனங்கள் பணம் செலவு செய்வது, அறிவுச் செலவு செய்வது, லட்ச ரூபாய்க்குப் பொம்மைகள், சந்தனம், குங்குமம், கற்பூரம், சாம்பிராணி, கடலை, பொரி, சுண்டல், வடை, மேளவாத்தியம் வாழைக்கம்பம், பார்ப்பனர்களுக்குத் தட்சணை, சமாராதனை, ஊர்விட்டு ஊர் போக ரயில் சார்ஜ் ஆகிய எவ்வளவு செலவாகின்றன என்பதை எண்ணிப் பாருங்கள்.

இவைகள் எல்லாம் யார் வீட்டுப் பணம்? தேசத்தின் செல்வமல்லவா? என்று கேட்கிறேன். ஒரு வருஷத்தில் இந்தப் பூஜையில், இந்த நாட்டில் செலவாகும் பணமும், நேரமும் கோடி ரூபாய் பெறுமானது என்ற கணக்குப்பார்த்தால், மற்றப் பண்டிகை, உற்சவம் புண்ணிய தினம், அர்த்தமற்ற சடங்கு என்பவைகளின் மூலம் செலவாகும் தொகை சுலபத்தில் விளங்கிவிடும். இதை எந்தப் பொருளாதார இந்திய தேசிய நிபுணர்களும் கணக்குப் பார்ப்பதே இல்லை.

*('இந்துமத பண்டிகைகள்' நூலிலிருந்து)*

# ஆயுதபூஜை-அண்ணாவின் அடுக்கடுக்கான கேள்விகள்

அமெரிக்காவைக் கண்டுபிடித்த கொலம்பஸ் , இந்தியாவுக்கு வழி கண்டுபிடித்த வாஸ்கோடகாமா, இந்தியாவை ஆதியில் ஜெயித்த அலெக்சாண்டர், இவர்களெல்லாம் ஆயுத பூஜை செய்தவர்களல்லர் நவராத்திரி கொண்டாடினவர்களல்லர். நூற்றுக்கு நூறு பேர் என்ற அளவில் படித்துள்ள மேனாட்டிலே சரசுவதி பூஜை, ஆயுத பூஜை இல்லை! ஏனப்பா கொஞ்சம் யோசிக்கக் கூடாதா? ஓலைக் குடிசையும், கலப்பையும், ஏரும், மண்வெட்டியும், அரிவாளும், இரட்டை வண்டியும், மண்குடமும் உனக்குத் தெரிந்த கண்டுபிடிப்புகள். தீக்குச்சிப் பெட்டிகூட நீ செய்ததில்லை - கற்பூரம் கூட நீ செய்ததில்லை. கடவுள் படங்களுக்கு அலங்காரத்துக்குப் போடும் கண்ணாடி கூட சரஸ்வதி பூஜை அறியாதவன் கொடுத்துதான் நீ கொண்டாடுகிறாய். ஒரு கணமாவது யோசித்தாயா, இவ்வளவு பூஜைகள் செய்து வந்த நாம், நமது மக்கள், இதுவரை என்ன புதிய அதிசயப் பொருளைக் கண்டுபிடித்தோம்.



உலகுக்குத் தந்தோம் என்று யோசித்துப் பாரப்பா! கோபப்படாதே! உண்மை அப்படித்தான் கொஞ்சம் நெஞ்சை உறுத்தும், மிரளாமல் யோசி, உன்னையும் அறியாமல் நீயே சிரிப்பாய். உன் பழைய நாள்களில் இருந்த பேரறிஞர்கள் தங்கள் புண்ணிய நூல்களை எல்லாம்கூட, ஓலைச் சுவடியிலேதானே எழுதினார்கள். அந்த பரம்பரையில் வந்த நீ, அவர்கள் மறைந்து, ஆங்கிலேயன் வருவதற்கு இடையே இருந்த காலத்திலே அச்சு இயந்திரமாவது கண்டு பிடித்திருக்கக் கூடாதா? இல்லையே!

மேனாட்டான் கண்டுபிடித்துத் தந்த அச்சு இயந்திரத்தின் உதவி கொண்டு உன் பஞ்சாங்கத்தை அச்சடித்துப் படித்து அக மகிழ்கிறாயே! அவன் கண்டுபிடித்த ரயிலில் ஏறிக்கொண்டு உன் பழைய அற்புதம் நடைபெற்ற திருத்தலம் போகிறாயே! அவன் கண்டுபிடித்துக் கொடுத்த ரேடியோவிலே உன் பழைய பஜனைப் பாட்டைப் பாட வைத்து மகிழ்கிறாயே! எல்லாம் மேனாட்டான் கண்டுபிடித்துக் கொடுத்த பிறகு அவைகளை உபயோகப்படுத்திக் கொண்டு பழைய பெருமையை மட்டும் பேசுகிறாயே, சரியா? யோசித்துப்பார். சரஸ்வதி பூஜை விமரிசையாக நடைபெற்றது என்று பத்திரிகையிலே சேதி வருகிறதே! அது நாரதர் சர்வீஸ் அல்லவே! அசோசியேடட் அல்லது இராயட்டர் சர்வீஸ் - தந்தி முறை - தசரதன் வீட்டிலே இருந்ததில்லையே! இராகவன் ரேடியோ கேட்டதில்லை.

சிபி, சினிமா பார்த்ததில்லை! தருமராசன், தந்திக் கம்பம் பார்த்ததில்லை! இவைகளெல்லாம் மிக மிகச் சாமான்யர்களான நமக்குச் சுலபமாகக் கிடைக்கிறது அனுபவிக்கிறோம். அனுபவிக்கும்போது கூட, அரிய பொருள்களைத் தந்த அறிவாளர்களை மறந்து விடுகிறோம், அவர்கள் சரஸ்வதி பூஜை, ஆயுத பூஜை, செய்தறியாதவர்கள் என்பதையும் மறந்து விடுகிறோம். ரேடியோவில் இராகவனைப் பற்றிய பாட்டும், சினிமாவில் சிபிச்சக்கரவர்த்தி கதையும் கேட்டும், பார்த்தும் ரசிக்கிறோம். இது முறைதானா? பரம்பரை பரம்பரையாக நாம் செய்து வந்த சரஸ்வதி பூஜை; ஆயுத பூஜை நமக்குப் பலன் தரவில்லையே, அந்தப் பூஜைகள் செய்தறியாதவர், நாம் ஆச்சரியப்படும் படியான அற்புதங்களை, அற்புதம் செய்ததாக நாம் கூறும் நமது அவதார புருடர்கள் காலத்திலே கூட இல்லாத அற்புதங்களை அறிவின் துணை கொண்டு கண்டுபிடித்து விட்டார்களே என்று யோசித்தால் முதலில் கோபம் வரும். பிறகு வெட்கமாக இருக்கும். அதையும் தாண்டினால் விவேகம் பிறக்கும். யோசித்துப்பார் - அடுத்த ஆண்டுக்குள்ளாவது!

*- அண்ணா,திராவிட நாடு - 26.10.1947*

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776

# சென்னை கழகச் செயல்வீரர் ‘எட்வின் நூல் விற்பனை இல்லம்’ திறப்புவிழா!

சென்னை மாவட்டக் கழக அமைப்பாளர், கழகச் செயல்வீரர் எட்வின் வேளச்சேரியில் புத்தக விற்பனை நிலையம் தொடங்கியுள்ளார். சுயமரியாதை சமதர்மப் படிப்பகம் மற்றும் எட்வின் புத்தக இல்லம் ஆகியவற்றை அக்-11, ஞாயிறு அன்று மாலை 4 மணிக்கு, கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் திறந்து வைத்தார். பெரியாரிய ஆய்வாளர் தஞ்சை பசு. கவுதமன், ஊடகவியலாளர் இந்திரகுமார் தேரடி, பேராசிரியர் கனக விநாயகம், எழுத்தாளர்கள் வேலழகன், இனியன் ராம மூர்த்தி, பெரியார் புக்ஸ் மணிகண்டன், ஊடகவியலாளர் பாட்டர், AISCSTBA நிர்வாகி ஆனந்தராஜ், ஓவியர் பரதன், அனைத்து ஜாதி அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர்கள் சங்கத் தலைவர் ரங்கநாதன் உள்ளிட்டோர் வருகை புரிந்தனர்.



விற்பனை நிலையம் திறப்பின் மகிழ்வாக "புரட்சிப் பெரியார் முழக்கம்" வளர்ச்சிக்கு ரூ. 6,000 வழங்கினார் எட்வின் பிரபாகரன். பதாகைகள், படிப்பகப் பெயர் பலகையை சென்னை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ப. அருண் வடிவமைத்தார்.

கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தலைமைக் குழு உறுப்பினர் அய்யனார், சென்னை மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி, மாவட்டத் தலைவர் மா.வேழவேந்தன், அமைப்பாளர் ந. தட்சிணாமூர்த்தி, தாம்பரம் நகர அமைப்பாளர் அருண் கோமதி, தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பேரன்பு, உள்ளிட்ட கழகத் தோழர்கள் 100-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

# கழக இளைஞரணி நடத்திய ‘தோழமைகளின் கூடுதல்’

கழக சென்னை மாவட்ட இளைஞரணி சார்பில் 02.10.2026 அன்று "தோழமை கூடும் நேரம்" நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்வில் ‘இளைய தலைமுறையினரின் நிகழ்கால அரசியல்’ என்னும் தலைப்பில் சென்னை மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி, ‘பிம்பச் சிறை 2.0’ என்னும் தலைப்பில் ஊடகவியலாளர் இந்திரகுமார் தேரடி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.





தமிழ்நாடு மாணவர் கழக சென்னை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பேரன்பு தொகுத்து வழங்கினார். எதிர்வரும் குடும்ப விழா நிகழ்விற்கு மாவட்ட இளைஞரணி சார்பாக இளைஞரணி அமைப்பாளர் பா.அருண் மாவட்டச் செயலாளரிடம் ரூ.5000 நன்கொடையாக வழங்கினார். நிகழ்வில் கழக பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மாவட்டத் தலைவர் வேலவேந்தன், மாவட்ட அமைப்பாளர் எட்வின் பிரபாகரன், மாவட்ட துணைச் செயலாளர் ராவணன், கழக இளைஞரணி, தமிழ்நாடு மாணவர் கழகம் மற்றும் கழக தோழர்கள் கலந்துகொண்டனர்.

# புதிய பொறுப்பாளர்கள் நியமனம் சங்கராபுரத்தில் மாவட்டக் கலந்தாய்வு!

சங்கராபுரத்தில் உள்ள பெரியார், அம்பேத்கர் சிலைக்கு 28/09/2026 திங்கட்கிழமை காலை 11.00 மணி அளவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி மாலை அணிவித்தார். வாசவி மண்டபத்தில் கள்ளக்குறிச்சி மாவட்டக் கலந்தாய்வுக்கூட்டம் கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கழகத்தின் அடுத்தகட்ட செயல்பாடுகள் குறித்தும், புரட்சிப் பெரியார் முழக்க சந்தா சேர்த்தல் தொடர்பாகவும், மாவட்டக் கழக கட்டமைப்பு, நிதி சேர்த்தல் தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டது.

கழகத் தலைவர் பேசுகையில் நாம் இயக்கத்தை வளர்த்தல் என்பது புதிய சமூதாயமாக,வளர்ச்சியடைந்த சமூதாயமாக, சமத்துவ சமூதாயமாக மாறுவதற்கு நம்முடைய பங்களிப்பு என்ன என்பதுதான். எனவே தோழர்களே மிகுந்த அக்கறையோடு செயல்பட வேண்டும் என்ற வேண்டுகோளை முன் வைத்துப் பேசினார்.



இந்நிகழ் வை கள்ளக்குறிச்சி மாவட்டச் செயலாளர் க. இராமர் ஒருங்கிணைத்தார். பெரியார் முழக்க சந்தாவாக ரூ.4500 கள்ளக்குறிச்சி மாவட்டக் கழகம் சார்பாக வழங்கினர். தலைமைக்குழு உறுப்பினர் அய்யனார் முன்னிலையில் கழக மாவட்ட, ஒன்றிய பொறுப்புகளை கழகத் தலைவர் அறிவித்தார்.

***க.மதியழகன் (மாவட்டத் தலைவர்), க.ராமர் (மாவட்டச் செயலாளர்), ந.வெற்றிவேல் (மாவட்டத் துணைச் செயலாளர்), மு.நாகராஜ் (மாவட்ட அமைப்பாளர்), மா.குமார் (ரிஷிவந்திய ஒன்றியத் தலைவர்), தே.ராமச்சந்திரன் (ரிஷிவந்திய ஒன்றியச் செயலாளர்), கி.ஆனந்தன் (ரிஷிவந்திய ஒன்றிய அமைப்பாளர்), அன்புரவி, (சங்கராபுரம் ஒன்றியச் செயலாளர்), இரா. கார்மேகம் (மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்), மு.குமரேசன், (மாவட்ட இளைஞரணிச் செயலாளர்), ச.கு.பெரியார் வெங்கட் (மாவட்டத் துணை அமைப்பாளர்), இரா. வீரமணி (மாவட்ட ஒருங்கிணைப்பாளர், திருவண்ணாமலை), மு.சங்கர் (கள்ளக்குறிச்சி நகரச் செயலாளர்) தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர்கள்: கு.பாபா, செ.வே.ராஜேஷ், இரா. ஜீவா, (மாணவர் கழக மாவட்ட துணை அமைப்பாளர்), சா. சூ.அறிவு (எ) ஏதுசாமி (மாணவர் கழக கடுவனூர் கிளை அமைப்பாளர்) ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.***

# குமாராபாளையம் கூட்டத்தில் கொளத்தூர்மணி உரை

## பெரியார் போராட்டங்களில் மனிதநேயம்

நாமக்கல் மாவட்டக் கழகத்தின் சார்பில் 27.09.2026 ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணி அளவில் தந்தை பெரியாரின் 148 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் குமாரபாளையத்தில் நடைபெற்றது. கூட்டத்தின் தொடக்கத்தில் குமாரபாளையம் மனிதநேய கலைக் குழுவின் சார்பில் வீதி நாடகமும் கிராமிய பாடல்கள் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. குமாரபாளையம் மாதுராசு பொதுக்கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். தலைமைக் குழு உறுப்பினர் கேப்டன் அண்ணாதுரை, மாவட்டச் செயலாளர் மு.சரவணன், மாவட்ட அமைப்பாளர் அ.முத்துப்பாண்டி, மாவட்டத் தலைவர் மு.சாமிநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். குமாரபாளையம் நகரத் தலைவர் மி.தா. தண்டபாணி வரவேற்புரையாற்றினார்.





கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, தி.க நாமக்கல் மாவட்டத் தலைவர் சு.சரவணன், திமுக தேவூர் பகுதி பொறுப்பாளர் தங்கவேல் ஆகியோர் உரையாற்றினர். மாவட்டத் தலைவர் மு.சாமிநாதன் உரை நிகழ்த்தி; பெரியார் பிறந்தநாள் வாகனப் பேரணி மற்றும் பொதுக்கூட்ட வரவு செலவுகளை படித்தார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, “சட்ட எரிப்புப் போராட்டம், பிள்ளையார் சிலை உடைப்புப் போராட்டம், இந்தி எழுத்து அழிப்புப் போராட்டம், பிராமணாள் உணவக பெயர் அழிப்புப் போராட்டம் ஆகிய போராட்டங்களை அறிவித்து; அந்தப் போராட்டத்தைப் பெரியார் எப்படி நடத்தினார்; மனிதநேயத்தை பெரியார் எப்படிக் கடைப்பிடித்தார், தோழர்களும் மனிதநேயத்தோடு எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று பெரியார் அறிவுறுத்தியதை’ எடுத்துரைத்தார். “கழகத் தோழர்கள் காவல்துறை தாக்க நேர்ந்தால்; நாம் எடுத்துக் கொண்டிருக்கிற பொது நோக்கத்தைக் கருத்தில் கொண்டு காவல்துறையிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்” என்று பெரியார் அறிவுறுத்தியதையெல்லாம் விளக்கி சிறப்புரையாற்றினார்.

தலைமைக் குழு உறுப்பினர் கேப்டன் அண்ணாதுரை அவர்களின் இணையர் பரிமளம் பித்தப்பை அறுவை சிகிச்சை செய்து உடல்நலக் குறைவாக இருந்தார். அவர்கள் இல்லத்திற்கு கழகத் தலைவர் நேரில் சென்று நலம் விசாரித்தார். குமாரபாளையம் கழகத் தோழர்கள், குடும்பம் குடும்பமாக வந்து பங்கெடுத்துக் கொண்டார்கள்.

ராசிபுரம் பொறுப்பாளர் பிடல் சேகுவாரா, காளிப்பட்டி பொறுப்பாளர் பெரியண்ணன், திருச்செங்கோடு மனோஜ், நங்கவள்ளி தோழர்கள் கிருஷ்ணன், பிரபாகரன், குருப்ப நாயக்கன்பாளையம் பூபதி, கோவை வெங்கட், திருப்பூர் முத்து, அய்யப்பன், தேவூர் சங்கர், பள்ளிபாளையம், பவானி, ஈரோடு, நங்கவள்ளி, தேவூர் ஆகிய பகுதிகளில் இருந்தும் தோழர்கள் திரளாக பங்கேற்றனர். கூட்டத்தின் இறுதியில், கழகத் தோழர் மாதுராசின் நண்பர் ஆத்தூர் செல்வம் மற்றும் பவானி கண்ணன் அவர்களின் ஏற்பாட்டில் அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்பட்டது.

பொதுக்கூட்டத்தின் தொடக்கத்தில், கடந்த ஆண்டு பெரியார் பிறந்த நாளிலிருந்து இந்த ஆண்டு பெரியார் பிறந்தநாளுக்குள் அரசியல் மற்றும் பொதுவாழ்வில் பங்கெடுத்துக் கொள்கிறவர்களின் குடும்பத்தில் ஏற்படுகிற இழப்பிற்கு குமாரபாளையம் மாவட்டக் கழகத்தின் சார்பில் இரங்கல் தெரிவிப்பது என்று முடிவு எடுக்கப்பட்டது. அதனடிப்படையில், கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் அய்யா நல்லகண்ணு, பெரியார் பற்றாளர் பட்டிமன்ற நடுவர் சாலமன் பாப்பையா, தமிழ் திரையுலகில் எளிமையான காட்சிகளை படமாக்கியவரும், ஈழத் தமிழர்களுக்காக ஒட்டுமொத்த திரையுலகையும் திரட்டி குரல் கொடுத்த பாரதிராஜா, குமாரபாளையம் அய்.எம்.ஆர் அறக்கட்டளை நிர்வாகி சிவகுமார் அவர்களின் தந்தையார் கந்தசாமி, குமாரபாளையம் திமுக முன்னாள் நகர்மன்றத் தலைவர் சேகர் அவர்களின் இணையர் அலமேலு, திமுக குமாரபாளையம் தெற்கு நகர பொறுப்பாளர் ஞானசேகரன், பொதுநலக் கூட்டமைப்பின் சுந்தரம் காலனி பன்னீர்செல்வம் அவர்களின் சகோதரர் செந்தில்குமார், குமாரபாளையம் டி.கே.கைலாசம் ஆகியோருக்கு இரங்கல் தெரிவித்து ஒரு நிமிடம் அனைவரும் எழுந்து நின்று மவுன அஞ்சலி செலுத்தினர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : October 15, 2026

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor :K. Rajendran